


நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம் பாளையத்தில் மறைந்த கழக மூத்த மூன்னோடி ஏ.ஆர்.துரைசாமி நினைவை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 100 அடி நினைவு கொடி கம்பத்தில் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து நிழற்கூடம் மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. ராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். துரைசாமி, கே.பி. ஜெகநாதன், கண்ணன், மருத்துவர்.தருண், மருத்துவர்.மாயவன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ரங்கசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூரில் – கழக மூத்த முன்னோடி

# ஏ.ஆர்.துரைசாமி நினைவு நிழற்கூடம் திறப்பு!

## கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. – முன்னாள் அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், ஜூலை 18 -

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம்பாளையம் ஊராட்சியில், முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதி கழக மூத்த முன்னோடி ஏ.ஆர். துரைசாமி நினைவு நிழற்கூடத் திறப்பு விழா மற்றும் 100 அடி உயரக் கம்பத்தில் கழக கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம்பாளையத்தில் மறைந்த நம் நினைவில் வாழும் கழகத்தின் மூத்த மூன்னோடி ஏ. ஆர்.துரைசாமி அவர்களின் நினைவை போற்றும் வகையில் அவரது குடும்பத்தினர் சார்பாக அமைக்கப்பட்டுள்ள 100 அடி நினைவு கொடி கம்பத்தில் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து அவரது நினைவாக அமைக்கப்பட்டுள்ள நிழற்கூடம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் திறப்பு விழா நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் இணைந்து நிழற்கூடத்தைத் திறந்து வைத்து, கட்சிக் கொடியை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து, அப்பகுதி மாணவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்ட கிரிக்கெட், கபடி மற்றும் டென்னிஸ் விளையாட்டு மைதானங்களையும் அவர்கள் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. ராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். துரைசாமி, கே.பி. ஜெகநாதன், பேரூர் செயலாளர் திரு.கண்ணன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் மருத்துவர்.தருண், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மருத்துவர். மாயவன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ரங்கசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை உயர்வு!

## மழைக்கால கூட்டத் தொடரில் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, ஜூலை 18 -

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34இல் இருந்து 38 ஆக அதிகரித்து பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவை, எதிர்வரும் மழைக்கால கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு கொண்டுவரவுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34இல் இருந்து 38ஆக அதிகரித்து பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவை, எதிர்வரும் மழைக்கால கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு கொண்டுவரவுள்ளது.

ஜூலை 20ஆம் தேதி தொடங்கவுள்ள மழைக்கால கூட்டத் தொடர், ஆகஸ்ட் 13ஆம் தேதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956இல் இயற்றப்பட்ட போது, தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 10 என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டது. 1960இல் சட்டத் திருத்தம் மூலம் இந்த எண்ணிக்கை 13ஆகவும், 1977 இல் அடுத்த சட்டத் திருத்தம் மூலம் 17ஆகவும் உயர்த்தப்பட்டது.

1986இல் மீண்டும் திருத்தச் சட்டம் மேற்கொள்ளப்பட்டு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17லிருந்து 25ஆக உயர்த்தப்பட்டது. 2009 இல் இந்த எண்ணிக்கை 30 ஆகவும், 2019 இல் தலைமை நீதிபதி உள்பட நீதிபதிகளின் எண்ணிக்கை 34ஆகவும் உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34 இல் இருந்து 38ஆக உயர்த்தும் வகையில் சட்டத் திருத்த மசோதா கொண்டுவர மத்திய அமைச்சரவை கடந்த மே மாதம் ஒப்புதல் வழங்கியது.

ஆனால், உடனடியாக அவசர சட்டம் கொண்டு வரப்பட்டு, நீதிபதிகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்த்தப்பட்டது. அவசர சட்டம் பிறப்பிக்கப் பட்ட பிறகு உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

எந்தவொரு அவசர சட்டமும் ஆறு மாத காலம் செல்லுபடியாகும் நிலையில், நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கிவிட்டால், 6 வாரங்களுக்குள் அது தொடர்பான சட்ட மசோதாவை நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், அவசர சட்டம் காலாவதியாகிவிடும். அதன்படி, எதிர்வரும் மழைக்கால கூட்டத் தொடரில், அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவை ஒன்றிய அரசு கொண்டுவர உள்ளது.

எதிர்க்கட்சிகளின் தீர்மானம் ஏற்பு: நாடாளுமன்ற அமர்வு நடைபெறாத போது, தனது நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒன்றிய அரசு அவசர சட்டத்தைப் பிறப் பித்து, அதன் பின்னர் சட்ட மசோதாவை கொண்டுவரும்போது, எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் சமர்ப்பிப்பது நடைமுறையாகும்.

இது, சட்ட மசோதா மீது எதிர்க்கட்சிகள் விவாதிக்க வாய்ப்பளிக்கும். அதன்படி, அவசர சட்டத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக, மக்களவையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

# இந்தியாவில் 6 மாதங்களில் 12.7 லட்சம் சைபர் குற்றங்கள்!

புதுடில்லி, ஜூலை 18 -

டிஜிட்டல் அரெஸ்ட், இணைய வழியில் வங்கி மோசடி, ஹேக்கிங், சமூக வலைதள மோசடிகள், ஆன்லைன் நிதி மோசடிகள், வைரஸ் தாக்குதல் உட்பட பல்வேறு வகையான சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஜனவரி 1ஆம் தேதி முதல் ஜூன் 30ஆம் தேதி வரையிலான 6 மாத காலத்தில் நாடு முழுவதும் சைபர் குற்றங்கள் தொடர்பாக 12.71 லட்சம் புகார்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இதில் 2.86 லட்சம் புகார்கள் ஆன்லைன் வங்கி பணப்பரிமாற்ற மோசடி தொடர்பானவை. ஒட்டுமொத்தமாக ரூ.10,178 கோடி மோசடி செய்யப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 63,116 சைபர் குற்றங்கள் மூலம் ரூ.897.79 கோடி அளவுக்கு மோசடி செய்யப்பட்டு உள்ளது.



கும்பகோணம் தில்லையம்பூர் ஊராட்சி கீழத்தெருவைச் சேர்ந்த பவுன்ராஜ் லலிதா இவர்களின் மகன் வினோத் மின்சார கம்பத்தில் வேலை பார்க்கும் போது மின்சாரம் தாக்கி இறந்ததை அறிந்த தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் இறந்த வினோத் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது துணைவியாருக்கும்,தாயாருக்கும் ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கினார். அருகில் தில்லையம்பூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டி.எம்.கரிகாலன், பெரும்பாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.கே.பாஸ்கர், மு .ஒ.குழு.உறுப்பினர் பாண்டியன், கிளைக் கழகச் செயலாளர் ஆனந்த், ராஜ்மோகன், ராஜசேகர், சாமிநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

### சிறைவார்டன் – கைதிகளால் அடித்துக் கொல்லப்பட்ட

# சபரி வர்மன் உடலை அடக்கம் செய்ய கிராம மக்கள் எதிர்ப்பு!

## நிவாரண உதவியை – உடனே வழங்கக் கோரி சாலை மறியல் – போராட்டம்!



கன்னியாகுமரி, ஜூலை.18-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டு இருந்த மாற்றுத்திறனாளி இளைஞரான சபரி வர்மன் சிறை வார்டன்கள், சக கைதிகள் அடித்து கொலை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் பிரேத பரிசோதனை முடிந்தும் அவரது உடலை குடும்பத்தினர் வாங்க மறுத்தனர். இந்நிலையில் அவரது குடும்பத்தினரிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடந்ததை அடுத்து அவரது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் கிராம மக்கள் சபரி வர்மன் குடும்பத்துக்கு உடனடியாக இழப்பீடுகளை வழங்க வேண்டும் என உடலை அடக்க செய்ய எதிர்ப்பு தெரிவித்து அமரர் ஊர்தியை நிறுத்தி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே ஈத்தங்காட்டை சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரி வர்மன் ( வயது 34). இவர் தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை செய்ததாக கூறி செந்தாமரைகுளம் போலீசார் கடந்த 9 ம் தேதி கைது செய்தனர். அதன்பிறகு சபரி வர்மன் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரை சிறை வார்டன்கள், சக கைதிகள் அடித்து கொன்றதாக குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். இதற்கிடையே தான் அவரது உடல் நாகர்கோவில் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது சபரிவர்மன் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனால் சபரி வர்மன் மரணத்திற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். அவரை அடித்து கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடும்பத்தினர் போராட்டம் செய்தனர். கடந்த 4 நாட்களாக அவரது உடலை குடும்பத்தினர் வாங்க மறுத்தனர்.

இந்நிலையில் தான், நேற்று சபரி வர்மன் உடலை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட வீடியோவின் சிடி தனியாக குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. நான்கு மருத்துவ குழுக்களால் காயங்களும், பிரேதப் பரிசோதனை அறிக்கையும் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அப்போது இரண்டும் ஒன்றாக இருந்தது. மேலும் சபரி வர்மனின் இறப்புக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இதற்கு குடும்பத்தினர் ஒப்புக்கொண்டு சபரி வர்மன் உடலை பெற்று கொண்டனர்.

இதையடுத்து சபரி வர்மனின் உடல் அமரர் ஊர்தியில் ஏற்றப்பட்டு சொந்த ஊருக்கு எடுத்து செல்லப்பட்டது.சொந்த ஊரை அமரர் ஊர்தி நெருங்கியது அப்போது சபரி வர்மனின் சொந்த ஊர் மக்கள் அமரர் ஊர்தியை தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். சபரி வர்மன் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டிய இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும். அதுவரை உடலை அடக்கம் செய்ய விடமாட்டோம் என்று கூறினர். இதனால் அதிகாரிகள் அவர்களை சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

---

### ம.சேசுராசு தலைமை - அன்பழகன் பொற்கோ வரவேற்புரை!

# மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் திருவுருவப் படத்திறப்பு!

## மும்பை கலைஞர் மாளிகையில் நிகழ்ச்சி! கழகத்தினர் பங்கேற்பு!



மும்பை, ஜூலை 18 -

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் அவர்கள் உடல்நலக்குறைவால் 13.06.2026 அன்று மும்பையில் மறைந்தார்.

அவரது திருஉருவப் படம் திறப்பு /நினை வேந்தல் நிகழ்வு மும்பை தி.மு.க. சார்பில் 19.07.2026 ஞாயிறு மாலை 6 மணிக்கு தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறுகிறது.

தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ வரவேற்புரை யாற்றுகிறார்.

பம்பாய் திருவள்ளுவர் மன்றம்,மற்றும் கலைஞர் தமிழ்ச்சங்கம் செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன் படத்தை திறந்து வைக்கிறார். தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பானர் மாறன் ஆரியசங்காரன், மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன், முன்னாள் தாராவி தி.மு.க. செயலாளர் என்.வி.சண்முகராசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நினைவேந்தல் உரை யாற்றுவோர்:

எஸ் சாலமோன் ராஜா விசிக அமைப்பாளர் மும்பை, அரசூர் இரா.மதியழகன், ஜெரிமெரி தமிழ்ச் சங்கம் தலைவர் இல.முருகன், ஆ.பாலசுப்ரமணியன் (முல்லூண்ட்) இரா.ரவிரஜினி,தலைவர்,தமிழ் ஓட்டுநர் சங்கம் மும்பை. காரை கரு.இரவீந்திரன் (பீவண்டி) கே.ஏ.ஜாகீர் உசேன் (தானே) தாராவி, சி.பாண்டியன், தே.ஸ்டீபன் கலந்தை சண்முகவேலு, பிரபுபிலிப், கோ.கருணாநிதி, பொய்சர் க.மூர்த்தி, அன்பில் ரஞ்சன், காளியப்பன், மும்பை திராவிடர் கழக நிர்வாகி கள் :

இ.அந்தோணி (துணைத் தலைவர்) ஜெ.வில்சன் (செயலாளர்) பெரியார் பாலா ( பொருளாளர்) அ.கண்ணன் (துணைச்செயலாளர்) உலகநாதன்,சங்கர் திராவிட், குப்பன், பொன் சுப்பிரமணியன், ஜி.முத்து, மு. ராசேந்திரன்,க.மு. முனியன்,

கே .காளியப்பன், கா. சின்னையா, ராஜேந்திர குமார், கிளைக் கழகச் செயலாளர்கள்: சேரை சா.பிரகாஸ், இரா. காந்தி, அப்துல் திவான் மைதீன், சேலம் மா.சீனிவாசன்,வே. ரவிச்சந்திரன், பி.இராமையா, பொன்.இலக்குமணன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றுகிறார்கள்.

மனோகரன் மாணிக்கம் நன்றியுரையாற்றுகிறார்.

---

### கொடுங்கையூர் குப்பைக் கிடங்கு அருகே கட்டுமானக் கழிவுகளால்

# 75 சதவிகிதம் தூர்ந்துவிட்ட பக்கிங்காம் கால்வாய்!

## வடசென்னைக்கு வெள்ள அபாயம் !

சென்னை, ஜூலை 18-

கொடுங்கையூர் குப்பை கிடங்கு அருகே பக்கிங்காம் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், வடகிழக்கு பருவ மழையின்போது, வட சென்னை மக்கள் வெள்ள பாதிப்பில் தவிக்கும் அபாயம் உள்ளது.

ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னையில் உள்ள நீர்வழி கால்வாய்களில் தூர்வாரும் பணிகளை மாநகராட்சி நிர்வாகம் செய்வது வழக்கம். குறிப்பாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புதிய மழைநீர் வடிகால்கள் அமைப்பது, ஏற்கனவே உள்ள வடிகால்களில் வண்டல் கழிவுகளை அகற்றுவது, நீர்நிலை மற்றும் உபரி நீர் கால்வாய்களை தூர்வாரி, சீரமைப்பது போன்ற பணிகள் நடைபெறும்.

குறிப்பாக கோட்டூர்புரம் அடையாறு ஆறு, ராயபுரம் மண்டலத்தில் வடக்கு பக்கிங்காம் கால்வாய், வேளச்சேரி ஏரி, மணலி ஏரி, திருவிக நகர் மண்டலத்தில் ராஜிவ்காந்தி நகர் அருகிலுள்ள ஏகாங்கிபுரம் கால்வாய், நொளம்பூர் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ரெட்டி குப்பம் கால்வாய், பாடி கால்வாய், சின்னசேக்காடு ஜாகிர் உசேன் கால்வாய், கொடுங்கையூர் கேப்டன் காட்டன் கால்வாய் உள்ளிட்ட முக்கிய கால்வாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வெள்ள பாதிப்பில் இருந்து மக்களை காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், சென்னை மாநகராட்சியின் அலட்சியத்தால் முன்னெச்சரிக்கை பணிகள் சரிவர நடைபெறவில்லை. குறிப்பாக, வட சென்னை பகுதி எந்தவொரு முன்னெச்சரிக்கை பணிகளும் நடைபெறாததால், வரும் மழைக்காலத்தில் கடுமையான வெள்ளப் பேரழிவைச் சந்திக்கும் அபாயம் உள்ளது.

கொடுங்கையூர் குப்பை கிடங்கு அருகே உள்ள மிக முக்கிய வடிகாலாக திகழும் பக்கிங்காம் கால்வாயில், டன் கணக்கில் கட்டுமான கழிவுகளும் மணலும் கொட்டப்பட்டு நீர் வழித்தடம் முற்றிலுமாக தூர்ந்துள்ளது.



புதூர் மத்திய ஒன்றியம், மாதராஜபுரம் கிளை செயலாளர் தங்கப்பாண்டி இல்ல விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு வாழ்த்தினார். நிகழ்வில் புதூர் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, விளாத்திகுளம் ராமசுப்பு, மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம், ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாராமன், புதூர் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் தினகரன், ராமர் கிளைச் செயலாளர் சுப்பையா, பொறியாளர் அணி சின்னப்பன், துரைராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.